(*c*) whether the Government have any proposal to construct more houses in that area ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 228.

(*b*) The total number of persons registered up to 29th February 1960 is 1,413. The total number of persons who were allotted quarters is 505 including those who have since vacated the quarters.

(*c*) Yes, Sir. Under the Rental Housing Scheme formulated by the Government of India for enabling State Governments to construct houses for being let out to their low paid employees, a tentative scheme to construct 36 blocks comprising of 176 flats in Todhunternagar at a cost of Rs. 16 lakhs is under the consideration of the Government.

SRI N. K. PALANISAMI : 1,413 அப்ளிகேஷன் வந்ததற்கு 505 பேர்களுக்குத்தான் வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் அங்கே இருக்கக்கூடிய அதிகப்படியாக சம்பளம் வாங்கக்கூடிய அதிகாரிகள் அதே இடங்களில் இருந்துகொண்டு தங்களுக்குச் சொந்தமாக வீடுகள் இருந்தாலும்கூட அவைகளுக்குச் செல்லாமல் அவைகளை தங்களுடைய குடும்பத்தார்களுக்கோ அல்லது உறவினர்களுக்கோ கொடுத்து விடுகிறார்கள். அதுதான் இதற்குக் காரணமா என்பதை விசாரித்து அப்படி வீடுகளை விட மாட்டேன் என்று சொல்லக்கூடிய அதிகாரிகளை அங்கிருந்து நீக்குவதற்கு சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அப்படிப்பட்டவர்களுக்கு வீடுகள் சொந்தமாக இருந்து அவர்கள் போகமாட்டேன் என்று சொன்னால் அதற்கு அரசாங்கம் இடம் கொடுக்காது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேற்கொண்டு முழு விவரம் வேண்டுமானால் கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் சொல்லுகிறேன்.

Madras City roads.

* 583 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state the reason for not classifying any of the Madras City roads as national highways ?

THE HON. SRI P. KAKKAN : According to the provisions of the National Highways Act, 1956, roads within towns having a population of 20,000 and more are not to be classified as national highways and as such the roads in Madras City are not classified as national highways.

SRI A. A. RASHEED : Is it a fact that by not classifying these roads as national highways, we are not getting subsidies and grants from the Union Government ? If so, will the Government reclassify them as national highways and try to get the subsidy from the Union Government which we are entitled to ?

THE HON. SRI P. KAKKAN : இந்த மாகாணத்திலுள்ள பிரதம இஞ்சினியர் அவர்கள் சில நேஷனல் ஹைவேஸ்களை சில இடங்களில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது, எவைகளையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுபற்றி.

SRI K. VINAYAKAM : சென்னை நகரத்திலுள்ள ரோடுகளை ஹைவேஸில் எடுக்க முடியவில்லை என்றால் நகரத்திலுள்ள சில ரோடுகளை யாவது அதாவது மௌண்ட்ரோடு, பூந்தமல்லி ஹை ரோடு, முதலியவைகளையாவது அந்தப் பகுதியின்கீழ் எடுத்து பராமரிப்பதாக யோசனை இருந்ததே, அதைத்தான் இப்பொழுது கைவிட முயற்சிக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : மூன்று ரோடுகளை எடுத்துக்கொள்வதாக இருந்தது. அவைகளாவன :

I. National Highways 45—Great Southern Trunk Road, i.e., Madras-Tiruchirappalli-Dindigul Road.

(*a*) Starting point—Wallajah Gate at Fort St. George.

(*b*) Route—Mount Road up to City limit.

II. National Highways 4—Great Western Trunk Road, i.e., Madras-Chittoor-Bangalore Road.

(*a*) Starting point—Wallajah Gate Road at Fort St. George.

(*b*) Route—Wallajah Gate to Fort Umbrella (i.e., Muthuswamy Iyer Road-General Hospital Road and Poonamallee High Road up to City limit).

III. National Highways 5—Great Northern Trunk Road, i.e., Madras-Calcutta Road.

(*a*) Starting point—Junction of Wall Tax Road with Poonamallee High Road near Central Station.

(*b*) Route—Wall Tax Road-Erukkancheri High Road up to City limit.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், சென்னைபோன்ற தலைசிறந்த நகரசபை நல்ல முறையில் நடந்து வருவதால் அதன் இடத்திலேயே இந்த நிர்வாகத்தை ஒப்படைக்கக்கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கே இருக்கிற கமிஷனரையும் மேயரையும் கேட்டால் அதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம்.

SRI K. ANBAZHAGAN : சென்னை போன்ற பெரிய நகரசபைகளுக்கு இந்த நெடுஞ்சாலைகளில் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்கள் பலவாகும். ஆகவே தேசீய நெடும் சாலைகளின் நிர்வாக பொறுப்பை அவர்களிடத்திலேயே இருக்க வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா ? இப்படிப்பட்ட பெரிய சாலைகளை சீர்செய்வதற்கு—இவைகள் தேசீய நெடுஞ்சாலைகளை இணைப்பவை என்ற அடிப்படையில் இவற்றை எடுத்துக் கொள்ளாமல் நகரசபைக்கு அதிகப்படியான உதவித் தொகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : அதற்குரிய செலவு தொகையாகிய 32 ஆயிரம் ரூபாயை மௌண்ட்ரோடு, பூந்தமல்லி ஹை ரோடு முதலியவைகளைப் பராமரிப்பதற்கு என்று கொடுக்கப்பட்டுவருகிறது. மற்ற ஜில்லாக்களிலும் அப்படி கொடுக்கப்பட்டுவருகிறது. மற்றவைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள விரும்புகிறது.

Children's theatre.

* 584 *Q.*—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any review of the working of the Children's theatre was conducted ; and

(*b*) if its working is satisfactory whether there is any proposal to open such theatres in other cities ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No.

(*b*) There is no proposal to open such theatres in other cities.